ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 1983/31 - 2016 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.09.09

*1983/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், அட்டவணை 01 நிரல் I இல் குறிப்பிடப்பட்ட அதன் நேரொத்த பகுதியின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப் பகுதிகள் அபிவிருத்திக்கு பொருத்தமானதென கருதுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.*

பாட்டலி சம்பிக்க றணவக்க (பா. உ.),
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆவது மாடிகள், "சுஹுறுபாய"
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
*2016, யூலை 22.*

**அட்டவணை 01**

களுத்துறை மாவட்டம்

| *நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| ஏற்கனவே வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 38/16 இன் கீழ் 01.06.1979 இல் பிரகடனப்படுத்தப்பட்ட களுத்துறை நகர சபைப்பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 62 இன் கீழ் 09.08.1979 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பேருவலை நகர சபைப்பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 72/14 இன் கீழ் 25.01.1980 இல் பிரகடனப்படுத்தப்பட்ட புலத்சிங்கள நகர அபிவிருத்திப்பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 100/4 இன் கீழ் 04.08.1980 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பாணந்துறை - நகர சபைப் பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 100/4 இன் | **வடக்கு :** மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லை, பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் பழைய காலி வீதியில் அமைந்துள்ள பொல்கொடை ஆற்றின் பழைய பாலத்தின் மத்தியகோடு என்பன இடைவெட்டும் புள்ளியிலிருந்து மொறட்டுவை தெற்கு எல்லையினூடாக தென்கிழக்கு நோக்கி கீறப்பட்ட கோடானது, கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையை சந்திக்கும் வரை; அதிலிருந்து, கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு மற்றும் தெற்கு எல்லையினூடாக வடகிழக்கு நோக்கி கீறப்பட்ட கோடானது, ஹோமாகம பிரதேச |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கீழ் 04.08.1980 இல் பிரகடனப்படுத்தப்பட்ட ஹொரணை நகர சபைப் பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 223/16 இன் கீழ் 17.12.1982 இல் பிரகடனப் படுத்தப்பட்ட கரையோர வலயம், வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 419/5 இன் கீழ் 15.09.1986 இல் பிரகடனப்படுத்தப்பட்ட மத்துகம பட்டினப் பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல 442/ 17 கீழ் 27.02.1987 இல் பிரகடனப்படுத்தப்பட்ட தொடங்கொட நகர அபிவிருத்தி பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 679/ 2 ஆம் இலக்க, கீழ் 09.09.1991 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பண்டாரகம நகர அபிவிருத்தி பகுதி, வர்த்தமான பத்திரிகை (அதி விசேட) இல. 821/23 இன் கீழ் 02.06.1994 இல் பிரகடனப்படுத்தப்பட்ட அளுத்கம நகர அபிவிருத்திப் பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 1004/19 இன் கீழ் 04.12.1997 இல் பிரகடனப்படுத்தப்பட்ட இங்கிரிய பட்டின பகுதி, வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 1239/27 இன் கீழ் 07.06. 2002 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பொல்கொட ஆற்று நீரேந்துப்பரப்பு வர்த்தமானப் பத்திரிகை இல. 1248/22 இன் கீழ் 09.08.2002 இல் பிரகடனப்படத்தப்பட்ட அகலவத்தை, பாலிந்தநுவர பெலவத்தை- மீஹாதென்னை நகர சபைப் பகுதிகள், வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேட) இல. 1270/30 இன் கீழ் 09.01.2003 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பேருவலை பிரதேச சபை பகுதி, அட்டவணை இல. 01 இன் கீழ் வர்த்தமானப் பத்திரிகை இல. 1420/17 இன் கீழ் 23.11.2005 இல் அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு களுத்துறை மாவட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட தெற்கு நெடுஞ்சாலை வலயம், வர்த்தமான பத்திரிகை (அதி விசேட) இல. 1393/6 இன் கீழ், 18.05.2005 இல் களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகள், வர்த்தமான பத்திரிகை (அதி விசேட) இல. 1455/14 இன் கீழ் 2006.07.25 இல் பிரகடனப்படுத்தப்பட்ட ஹொரணை விசேட நகர அபிவிருத்திப் பகுதி, வர்த்தமான பத்திரிகை இல. 1270/ 30 இன் கீழ் 09.01.2003 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பேருவலை பிரதேச செயலாளர் பிரிவு, உட்பட, மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலான சகல பகுதிகளும், நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளது.*

*நிரல் II*

செயலாளர் பிரிவின் மேற்கு எல்லை மற்றும் தெற்கு எல்லையின் இடை வெட்டை சந்திக்கும் வரை ; அதிலிருந்து ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லையினூடாக தென்கிழக்கு நோக்கி கீறப்பட்ட கோடானது பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு மற்றும் தெற்கு எல்லையின் இடைவெட்டு புள்ளியை அடையும் வரை; அதிலிருந்து பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கிலிருந்து தென்கிழக்காக கீறப்பட்ட கோடானது பேலியகொடை பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையை சந்திக்கும் வரை,

**கிழக்கு :**

இறுதியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையினூடாக, தெற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது கிறியெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு மற்றும் வடக்கு எல்லையின் இடைவெட்டு புள்ளியை அடையும் வரை ; அதிலிருந்து கிறியெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையினூடாக தெற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது அயகம பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் வரை; அதிலிருந்து அயகம பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையினூடாக தெற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது, களவான பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் வரை; அதிலிருந்து களவான பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக தெற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது நெலுவ பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் வரை.

**தெற்கு :**

இறுதியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து நெலுவ பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையினூடாக மேற்கு, நோக்கி கீறப்பட்ட கோடானது, தவளம பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு, மற்றும் கிழக்கு எல்லையின் இடை வெட்டுப்புள்ளியை சந்திக்கும் வரை; அதிலிருந்து தவளம பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கு எல்லையினூடாக தெற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது நியகம பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு மற்றும் வடக்கு எல்லையின் இடை வெட்டுப்புள்ளியை சந்திக்கும் வரை; அதிலிருந்து, நியகம பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையினூடாக மேற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது, எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையின் இடைவெட்டும் புள்ளியை சந்திக்கும் வரை; அதிலிருந்து, எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையினூடாக மேற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது பென்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு எல்லையை அடையும் வரை; அதிலிருந்து பென்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையினூடாக மேற்கு நோக்கி கீறப்பட்ட கோடானது இந்து சமுத்திரத்தின் அதியுயரலை கோட்டை சந்திக்கும் வரை.

**மேற்கு :**

இறுதியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இந்து சமுத்திரத்தின் அதியுயரலை கோட்டினூடாக வடக்கு நோக்கி கீறப்பட்ட கோடானது மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லையை சந்திக்கும்வரை; அதிலிருந்து, மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லையினூடாக வடக்கு நோக்கி கீறப்பட்ட கோடானது ஆரம்ப புள்ளியை சந்திக்கும் வரை.

*9- 907*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.